நமது முரசு
NAMATHU MURASU
தமிழ் மக்களின் நாடித்துடிப்பு
மாலை நாளிதழ்

# குழந்தை பருவ வலிப்புநோய் குறித்து ஜிப்மரில் தொடர் மருத்துவ கருத்தரங்கு



**புதுச்சேரி, டிச.1-**
புதுவை ஜிப்மரில் குழந்தை பருவ வலிப்புநோய் குறித்த தொடர் மருத்துவ கருத்தரங்கு நடந்தது.

ஜிப்மர் குழந்தை நல மருத்துவத்துறை சார்பில் இயக்குனர் வீர்சிங் நேகி வழிகாட்டுதலின்படி நடந்த கருத்தரங்கில் மருத்துவ கண்காணிப்பாளர் வினோத் குமார், ஜிப்மர் கல்லூரி முதல்வர் விக்ரம் காடே, ஆராய்ச்சி நிறுவன முதல்வர் சுனில் நாராயண் உட்பட நாடு முழுவதிலுமிருந்து சிறந்த குழந்தை நல நரம்பியல் நிபுணர்கள் பங்கேற்றனர். குழந்தைபருவ வலிப்புநோய் கண்டறிதல் மற்றும் பராமரிப்பு குறித்த விரிவான அமர்வுகள் நடத்தப்பட்டது. வலிப்புநோயின் தன்மை, அதற்கேற்ற மருந்து தேர்வு, உரியநோய் பகுத்தறியும் முறைகள் ஆகியவை குறித்து கருத்தரங்கில் விவாதிக்கப் பட்டது.

கருத்தரங்கில் ஜிப்மர் குழந்தைகள் மருத்துவத்துறை உதவி பேராசிரியர் ரம்யா சீனிவாச ரங்கன் பேசியதாவது:

உலக அளவில் ஆயிரம் குழந்தைகளில் 3 முதல் 6 பேர் வரை கை, கால் வலிப்பு நோய் ஏற்படுகிறது. இந்தியாவில் ஆயிரம் குழந்தைகளில் 5.59 பேர் வரையிலும் இந்நோய் பாதிப்பு உள்ளது. வலிப்பு நோய்க்கு ஆரம்ப கால, துல்லியமான நோயறிதல், சிகிச்சை மிக முக்கியமானது. உலக அளவில் 40 சதவீதம் 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வலிப்பு நோய் தாக்கம் ஏற்படுகிறது. 70 முதல் 80 சதவீதம் வரையிலான குழந்தைகள் ஒன்று அல்லது இரண்டு கூட்டு மருந்துகளால் வலிப்பு நோய்களில் இருந்து விடுபடுகின்றனர் என பேசினார்.

தொடர்ந்து வலிப்பு நோய் குறித்த மூட நம்பிக்கை, தவறான சிகிச்சை வழி முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது. முதுநிலை மாணவர் களுக்கு வலிப்பு நோய் குறித்த சுவரொட்டி போட்டி நடத்தப்பட்டு, அந்த படைப் புகள் காட்சிப்படுத்தப்பட்டன.

UNITED NEWS OF INDIA

Tuesday, Dec 2 2025 | Time 09:27 Hrs(IST)

# JIPMER inaugurates Annadhanam Centre to serve free meals to patients, attenders

Chennai, Nov 29 (UNI) JIPMER in Puducherry on Saturday inaugurated a dedicated Annadhanam Centre to provide wholesome meals
to outpatients and patients' attenders.
It was formally inaugurated by Puducherry Chief Minister N. Rangasamy, in the presence of Speaker of the Terriotorial Assembly Speaker R. Selvam, Rajya Sabha MP Selvaganapathy and JIPMER Director Dr. Vir Singh Negi.

Tags: #JIPMER inaugurates Annadhanam Centre to serve free meals to patients# attenders

Link: https://www.uniindia.com/news/south/health-tn-jipmer-free-meals/3657636.html